
# மகுடம்

# MAKUDAM

MAKUDAM
*That they all may be one*

இதழ் : 15 makudam2007@yahoo.com ஆனி : 01.06.2008

## பல்சுவை மாத இதழ்



உலக அதிசயம் **தாஜ்மஹால்** காதல் சின்னம்

NAVALY
Y.M.C.A
ESTD. - 1891

வெளியீடு:

நவாலி Y.M.C.A

விலை = 20/-

## ஆசிரியரின் பேனாவிலிருந்து...

**அன்பு வாசக நெஞ்சங்களே!**

மீண்டும் மகுடம் இதழுடன் உங்களை சந்திப்பதில் உவகை அடைகிறேன். தாங்கள் மகுடம் சஞ்சிகைக்கு வழங்கிவரும் ஆதரவை தொடர்ந்தும் சிறப்பாக வழங்கி வருகின்றீர்கள் என்பதனைச் சென்ற இதழில் மகுடத்தால் நடாத்தப்பட்ட போட்டிகளில் அநேகர் பங்குபற்றிய தனூடாக நிரூபித்துள்ளீர்கள்.

மேலும் தற்போது எமது சமூகத்தில் காணப்படுகின்ற தொலைக் காட்சி மற்றும் சினிமா மோகத்தையும் மீறி, வாசிப்புப் பழக்கத்தை ஊக்குவிப் பதில் மகுடம் ஓரளவிற்கு வெற்றி கண்டுள்ளான் என்றே சொல்ல வேண்டும். ஏனெனில் கல்விச் சமூகத்தின் மத்தியில் மகுடத்திற்கு காணப்படும் ஆதரவு அதிகரித் துள்ளது. அந்த வகையில் மேலும் எம்மை வளப்படுத்துவதற்கும், மெருகூட்டுவதற்கும் தங்களின் ஆலோசனைகளும், விமர்சனங் களும் அவசியமாகும். எனவே தாங்கள் மகுடத்தின் வளர்ச்சிக்குக் தேவையான ஆலோசனைகளையும், விமர்சனங்களையும் தவறாது அனுப்பிவைத்து எமது வளர்ச்சியில் பங்குகொள்ளுமாறு கேட்டுக்கொள் கின்றோம்.

*நாம் வளர மகுடம் வளர்வான்;*
*மகுடம் வளர நாமும் வளர்வோம்.*

*-ஆசிரியர்-*


## மகுடம்

*இதழாசிரியர் :- வண. A.S.T. ஆனந்தன்*
*துணை ஆசிரியர் :- M. மதுராஜ்*
*இணை ஆசிரியர் :- A. பியூலா*
*ஆசிரிய ஆலோசகர்:-*
*திரு. நவாலியூர் நடேசன்*
*வண. S. ஜோன் லிங்கேஸ்வரன்*
*திரு. N. சத்தியவேந்தன்*

| | |
|---|---|
| பிரதிகள் | :- 500 |
| நூலின் வகை | :- பல்சுவை இதழ் |
| வெளியீடு | :- நவாலி Y.M.C.A |
| பக்கங்கள் | :- 24 |
| விலை | :- 20/= |
| பதிப்பு | :- றூபன் பிறிண்டேர்ஸ். |


## வாசகர் கவனத்திற்கு...

மகுடம் இதழ்களில் இதழ் 7,8, 12, 13 என்பவை மாத்திரம் குறைந்தளவு கையிருப்பில் உள்ளன. தேவைப்படுவோர் நேரிலோ, முகவர்கள் ஊடாகவோ பெற்றுக்கொள்ளலாம். தபாலில் பெற விரும்புபவர்கள் **ரூபா 5.00 பெறுமதி யான ஐந்து முத்திரைகளை** தபால் உறைக்குள் வைத்து, தெளிவான தங்களுடைய சுய பெயர், முகவரியுடன் மகுடம் சஞ்சிகைக்கு அனுப்பி மேற்படி இதழ்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

**- ஆசிரியர் -**


உங்கள் ஆக்கங்கள், விமர்சனங்கள், கடிதங்கள், விளம்பரங்கள், வாழ்த்துக்கள் போன்ற சகல தொடர்புகளுக்கும்,

ஆசிரியர்.
மகுடம் சஞ்சிகை
நவாலி **Y.M.C.A**, நவாலி
மானிப்பாய்.
**T.P : 0774651244**
**E mail:- makudam2007@yahoo.com**

சிந்தனைக்கு.....

## புகைப்பிடிப்பதைத் தவிர்த்திடுங்கள்

இன்று இளம் வயதினரிடையே காணப்படும் தீய பழக்கங்களில் ஒன்று புகைப்பிடித்தல் ஆகும். இதனால் வரும் தீமைகளை அறிந்திருந்தும் கூட தொடர்ந்தும் இவ்வாறான செயலில் ஈடுபடுவது. இது எவ்வளவு முட்டாள்தனமானது என்பதனை ஏனோ இவர்கள் மறந்துவிடுகின்றனர்.



அயலிலுள்ளவர்கள், ஏன் உறவினர்கள்கூட இதற்கு அடிமைகளாகியுள்ளனர். உருக்குலைந்து உயிரையிழந்தவர்களும் உண்டு. இதனை நன்கறிந்தும் இவ்வாறு தீமையான ஒன்றை நாடி ஏன் உங்கள் மனம் செல்ல வேண்டும்? அப்படி அதில் நீங்கள் காணும் சுகம்தான் என்ன? சுகத்துடன் நீங்கள் சுமையையும் அல்லவா பெற்றுக்கொள்கிறீர்கள்? ஏன் இதை உங்கள் உள்ளங்கள் புரிந்து தெளிவடைய மறுக்கின்றன?.

வளர்ந்து வரும் இளைஞர்களே! உங்கள் விரல்களில் புகைத்து மறைந்து கொண்டிருப்பது சிகரட் மட்டுமல்ல. உங்கள் உடலிலுள்ள அங்கங்களும் தான் என்பதை, சிகரட்டை கையிலெடுக்கும்போது சற்று நினைத்துப் பாருங்கள். சிறிது சிறிதாக இப்பழக்கத்திலிருந்து உங்களை விடுவிடுத்துக்கொள்ளுங்கள். நாளடைவில் நீங்கள் அதிலிருந்து முழுமையாக விடுதலையடைவீர்கள்.

முயன்றால் முடியாது என்று எதுவுமே இவ்வுலகத்தில் இல்லை. முடியுமானவரை முயற்சித்து உங்கள் வாழ்வை வளமாக்கிக்கொள்ளுங்கள்.

**ஆக்கம்: திருமதி றூபி விமலதாஸ், நவாலி.**

(மே 31 உலக புகைப்பிடித்தல் தினத்தை முன்னிட்டு பிரசுரமாகிறது.)

---

## நற்சிந்தனை

| | | |
|---|---|---|
| நல்ல நாள் | - | இன்று |
| நல்ல வெகுமதி | - | மன்னிப்பு |
| இருக்க வேண்டியது | - | மானம் |
| இருக்கக் கூடாதது | - | ஆணவம் |
| தேவைக்கேற்றது | - | சாமர்த்தியம் |
| தேவைஅற்றது | - | விவாதம் |
| சுலபமானது | - | குற்றம் காணல் |
| கடினமானது | - | கறையின்றி வாழ்தல் |
| உயர்தரமானது | - | நட்பு |
| கீழ்த்தரமானது | - | துரோகம் |
| செய்ய வேண்டியது | - | உதவி |
| செய்யக் கூடாதது | - | இரண்டகம் |
| மிகவும் வேண்டியது | - | பணிவு |
| மிகப்பெரிய தேவை | - | நம்பிக்கை |
| மிகப்பெரிய நோய் | - | பேராசை |
| விலக்கவேண்டியது | - | பொறாமை |
| விலக்கக்கூடாதது | - | நேர்மை |
| ஆபத்தை விளைவிப்பது | - | அதிக பேச்சு |
| அகற்றவேண்டியது | - | சோம்பேறித்தனம் |
| அகற்றக்கூடாதது | - | உழைப்பு |
| நழுவவிடக்கூடாதது | - | வாய்ப்பு |
| நழுவவிடவேண்டியது | - | கூடாத நட்பு |
| மறக்கக்கூடாதது | - | செய்நன்றி |
| மறந்துவிடவேண்டியது | - | மற்றவர்பிழைகளை |



**தொகுப்பு: கே. அரவிந் - ஆனைக்கோட்டை.**

# ஒத்துப்போதல் – இசைந்து போதல்

## Conformity

**உளவியல்**

ஒரு குழுவினாலேயோ அல்லது தனிநபரினாலேயோ மேற்கொள்ளப்படும் உண்மையான அல்லது கற்பனையான அழுத்தத்தால் இன்னுமொரு நபரோ அல்லது குழுவோ தமது நடத்தையையோ அல்லது அபிப்பிராயத்தையோ மாற்றிக்கொள்வதே ஒத்துப்போதல் ஆகும்.

மனிதன் ஒரு சமூகப்பிராணி. அவன் தனித்து வாழ முடியாது என்பது தெரிந்தவிடயமே. ஒரு மனிதன் சமூகத்தின் ஏனைய மனிதர்களிடையே ஏற்றுக்கொள்ளும் செல்வாக்கு நம்பிக்கையைக் கட்டியெழுப்புகின்றது. இறுதியில் அத்தகைய செல்வாக்குப் பெற்ற மனிதன் கூறுவதனை ஏனையவர்கள் தேவ வாக்காகக் கொள்ளவும் முயலகின்றனர்.

இத்தகைய சமூகச்செல்வாக்கு கூடுவதற்கும், குறைவதற்கும் பல்வேறு காரணங்கள் காணப்படுகின்றன. அது மட்டுமன்றி மக்கள் தமது மனப்பாங்கை மாற்றுவதில்லை; அபிப்பிராயத்தையே மாற்றுகின்றனர்.

### முற்கற்பித்தல்

முற்சார்பு எண்ணங்கள் ஒரு நிகழ்வு. தனிமனிதர் அல்லது ஒரு குழு சார்பாகக் கற்பனை யாகவோ, பக்கச்சார்பாகவோ கொண்டுள்ள சாதகமானதும், பாதகமானதுமான எண்ணமே முற்சார்பு எனக் கொள்ளப்படுகின்றது. இதன் வழியாக நடத்தைகள் பற்றிய கருதுகோள்களை உருவாக்குகின்றனர். இதன் மூலம் விஞ்ஞான ரீதியான கருதுகோள்கள், ஆய்வுகள் உண்மையாகின்றன. இருப்பினும் சில கருதுகோள்கள் பொய்யாகவும் இருக்கின்றன. இருப்பினும் இக் கருதுகோள்கள், வரும் நன்மை தீமைகளையும் ஒழுக்கக் கட்டுப் பாடுகளையும் கவனத்தில் கொண்டவையாகவே அமைகின்றன.



### ஒத்துப்போதலுக்கான காரணங்கள்

1. நல்லபிள்ளை என்ற பாராட்டைப் பெறுவதற்காக
2. ஊரோடு ஒத்துப்போக வேண்டும் என்பதற்காக
3. எதிர்ப்பைச் சம்பாதிக்கக் கூடாது என்பதற்காக
4. அதிகமானோர் ஒத்துப்போவதால் அது சரியாகவே இருக்கும் என்று கருதுவதனால்
5. எதிர்ப்பதால் வெற்றியடைய முடியாது என்ற பயம் காரணமாக.

### ஒத்துப்போதல் தொடர்பில் மக்களின் வகைகள்

- ஒத்துப்போகின்றவர்கள்
- ஒத்துப்போகாதவர்கள்
- ஒத்துப்போதலுக்கு எதிரானவர்கள்



### ஒத்துப்போதல் உச்சநிலையில் உள்ளபோது

- நாங்கள் பிழை விடமாட்டோம் என்று நினைப்பர்.
- நன்மையை மட்டுமே காண்பர்
- நல்லது செய்வதாகவே நினைப்பர்
- அக்குழுவிலிருந்து வாபஸ் பெறப்படாதவரை இந்நிலை தொடரும்
- விலகிப் போவதைப் பற்றிச் சிந்திக்க மாட்டார்கள்.

**ஒரு குழுவின் அழுத்தத்திற்கு ஒருவர் அல்லது மற்றவர்கள் இசைந்து போகக் காரணம் என்ன?**

ஆரம்பத்தில் பிழை அல்லது தவறு எனப்பட்ட ஒரு விடயத்துடன் மக்கள் ஒத்துப்போக மாட்டார்கள். நாட்கள் செல்லச்செல்ல அதற்குப் பழக்கப்பட்ட மக்கள் அதனையே ஒத்துக் கொண்டு இசைந்து போக ஆரம்பிக்கின்றனர். இவ்வாறு ஒரு விடயத்தை ஒரு தொகுதி மக்கள் ஏற்றுக் கொண்டதும் நாளடைவில் அவர்களைப் பார்த்து ஏனைய மக்களும் ஒத்துப்போக ஆரம்பிக்கின்றனர். இருப்பினும் இவர்களின் இந்த மாற்றம் நிரந்தரமானதா? என்ற வினாவுக்கு விடை காண்பது கடினம். ஒருவர் எவ்வாறு தனது நிலைப்பாட்டில் உறுதியாய் இருக்கின்றார் என்பதும் அவர் தனது சகபாடிகளை விரும்புகின்றார் என்பதும் எமக்குத் தெரியாது.

ஓரிடத்தில் ஏன் மக்கள் ஒத்துப்போகின்றார்கள், எல்லோருடைய தீர்ப்பும் உண்மையானதா? நேர்மையானதா? என்று பார்க்கின்றபோது பல இடங்களில் தவறானது, நேர்மையற்றது என நன்கு தெரிந்தாலும் பிறர் எம்மை ஏற்றுக்கொள்ளாமல் விட்டுவிடுவர், ஒதுக்கி வைத்துவிடுவர் என்ற பயம் காரணமாகவும் ஒத்துப்போகின்றனர்.

அதாவது நாங்கள் நல்லவர்கள் என்ற பெயர் வாங்க வேண்டும். மற்றவர்களினுடைய நல்ல எண்ணத்தில் இருக்க வேண்டும். இதனை நாங்கள் எமது அன்றாட வாழ்க்கையில் செய்துகொண்டே இருக்கின்றோம்.

ஒவ்வொரு மனிதனிடமும் இருக்கின்ற பிரத்தியேகம் கூடுகின்றபோது ஒத்துப்போதல் ஆகும். மாறாக பிரத்தியேகம் குறைகின்றபோது ஒத்துப்போதல் குறையும்.


**இணைந்து போதலைக் குறைக்கும் காரணிகள்**

- ☆ குறைவான பிரத்தியேகம்
- ☆ மாறுபாடான சிந்தனை
- ☆ முன் அனுபவம்
- ☆ பாதுகாப்பு அதிகமாக இருத்தல்
- ☆ முன்னர் ஒத்துப்போகாமல் வெற்றி பெற்ற அனுபவம்
- ☆ ஒரு குழுவால் ஏற்றுக்கொள்ளப்பட்டால் மற்றைய குழுவுடன் ஒத்துப்போகமாட்டார்கள்.
- ☆ ஏற்கனவே குறித்த விடயம் தொடர்பாகப் பாதிக்கப்பட்டிருந்தால் ஒத்துப்போக மாட்டார்கள்.

உ + ம் :- உரிமை மறுக்கப்படல்

**பண்பாட்டு வழிமுறைகள்**







மேற்காட்டப்பட்டுள்ள வரைபடத்தின்படி எதுவித முரண்பாடுமின்றி முன்னரே காணப்படும் நிறுவனமயப்பட்ட வழிகள் மூலம் பண்பாட்டு இலட்சியங்களை அடைய முயல்வர். சமூகத்தில் பெரும்பாலானோர் இவ்வித நடத்தையினூடாக இலட்சியங்களை அடைய முற்படுவதால் தான் சமூகக் கட்டுக்கோப்பு உடையாமல் பேணப்படுகின்றது என்று கூறலாம்.

**த. ஸ்ரீகமலநாதன்- ஆற்றுப்படுத்தல் பயிலுநர், அகவொளி**

## பொது அறிவு

**இலங்கையின் புகையிரதப் பாதைகளும், அவை ஆரம்பிக்கப்பட்ட வருடங்களும்.**



1853 – கொழும்பு – கண்டி புகையிரதப்பாதை அமைக்கப்பட்டது.

1871 – பேராதனை – நாவலபிட்டி புகையிரதப்பாதை அமைக்கப்பட்டது.

1877 – கொழும்பு – பாணந்துறை புகையிரதப் பாதை அமைக்கப்பட்டது.

1877 – கொழும்பு – மாத்தளை புகையிரதப்பாதை அமைக்கப்பட்டது.

1899 – நாவலப்பிட்டி – பண்டாரவளை புகையிரதப் பாதை அமைக்கப்பட்டது.

1907 – கொழும்பு – புத்தளம் புகையிரதப்பாதை அமைக்கப்பட்டது.

1912 – கொழும்பு – இரத்தினபுரி புகையிரதப்பாதை அமைக்கப்பட்டது.

1905 – அநுராதபுரம் – மதவாச்சி புகையிரதப்பாதை அமைக்கப்பட்டது.

1905 – மஹோ – மட்டக்களப்பு புகையிரதப்பாதை அமைக்கப்பட்டது.

1955 – பொல்காவல – யாழ்ப்பாணம் புகையிரதப்பாதை அமைக்கப்பட்டது.

~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~

## சுருக்கக் குறியீடுகள்

**CEB** - Ceylon Electricity Board
இலங்கை மின்சாரசபை

**WHO** - World Health Organisation
உலக சுகாதார நிறுவனம்.

**ILO** - International Labour Organisation
சர்வதேச தொழிலாளர் நிறுவனம்

**ITO** - International Trade Organisation
சர்வதேச வர்த்தக நிறுவனம்

**PTA** - Parent Teachers Association
பெற்றோர் ஆசிரியர் சங்கம்

**ADB** - Asian Development Bank
ஆசிய அபிவிருத்தி வங்கி

**UNO** - United Nations Organisation
ஐக்கிய நாடுகள் தாபனம்.

**USA** - United States of America
அமெரிக்க ஐக்கிய அரசுகள்.

**T. Shalooja - Grade - 11, J/N/M/V.**

## உங்களுக்குத் தெரியுமா?

முதன்முதலில் இருசொற் பெயரீட்டு முறையை அறிமுகம் செய்தவர் கரோலஸ் லீனியஸ் ஆவார். இவர் சாதி, இனம் அடிப்படையில் பெயரீட்டு முறையை அறிமுகம் செய்தவராவார்.

குருதி திரவங்கள் யாவும் இளம் மஞ்சள் நிறமான குருதி திரவமுடைய பாய்மத்தில் மிதந்தவாறு காணப்படும். குருதியில் 55% குருதித்திரவ இழையத்தால் ஆனது. இதில் 92% நீராகும். உடலுக்குத் தேவையான பதார்த்தங்கள் பலவற்றை குருதி திரவ இழையம் கொண்டிருக்கும்.

**செ. விதுர்சன்**
**தரம் 10B**
**யா/ நவாலி மகாவித்தியாலயம்.**

## அறிவுக்களஞ்சியம்

1. உலகிற்கு ஒலிம்பிக் போட்டியை அறிமுகப் படுத்திய நாடு? **கிறீஸ்**
2. உலகில் குறைந்த நாடுகள் உள்ள கண்டம்? **அவுஸ்திரேலியா**
3. தற்போது உலகளாவிய ரீதியில் இணையமாக மாறிய வலைப்பின்னல்? **அர்பா நெற்**
4. உலகின் மிக உயர்ந்த கட்டடமான பெட்ரோனாஸ் கட்டடத்தின் உயரம் என்ன? **1483 அடி உயரம்**
5. உலகை எளிதில் இணைக்க உதவிய முதல் கண்டுபிடிப்பு? **தொலைபேசி**
6. பத்து வருடங்களுக்கு ஒருமுறை பிறந்தநாள் கொண்டாடும் நாட்டினர்? **சீனர்**
7. கடல் நீர் நீலமாக இருக்கும் அளவு? **10 அடிகள்**
8. திருமணத்தின் போது தேசியகீதம் பாடப்படும் நாடு? **நைஜீரியா**
9. கூடிய வானொலி நிலையங்களைக் கொண்ட நாடு? **அமெரிக்கா**
10. நாட்டின் பெயரைக் குறிப்பிடாது முத்திரை வெளியிடும் நாடு? **ஐக்கிய இராட்சியம்**

**சியானி – சுண்டிக்குளி மகளிர் கல்லூரி**
~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~

# பெண்



## ஆண் என்ன? பெண் என்ன?

"என்னென்ன விதத்தில் ஆண்களும், பெண்களும் வேற்றுமைப்படுகின்றனர்? விவாகம் அவர்களை எப்படித் தாக்குகிறது? இவர்களுக்கிடையேயுள்ள வேறுபாட்டை முற்றாக விரித்துரைக்க முடியாது. ஆனால் இது காரணமாகக் கணவனும், மனைவியும் என்றும் மாறான அபிப்பிராயங்களுக்கு உள்ளவர்களாக இருக்கவேண்டியதில்லை. ''இதுதான் பெண்கள் வேலை'', ''இது ஆண்களின் குணம்'' போன்ற குறிப்புக்கள் சிந்தனைக் குறைகளைக் காட்டுகின்றன. மற்றவர் எப்படி நினைக்கிறார், உணருகிறார் என்று விளங்கிக் கொள்ள முயற்சி செய்யாமையால் பல விவாகங்கள் குலைந்து போகின்றன.

ஒரு பெண்ணுக்கு ஆணிலும் விரைவாக மனக்கிளர்ச்சி உண்டாகிறது. அவள் சுற்றாடலுக்கு ஏற்றவாறு, உடனே இயங்குகிறாள். அவளை எளிதில் சிரிக்க அல்லது அழப்பண்ணலாம். ஆண்களுக்கு வீட்டுக்கு வெளியே சில விருப்புக்கள் இருக்கலாம். அவற்றோடு சம்பந்தப்படாத எதையும் அவர் விரும்பாமல் விடலாம்.

ஒரு பெண் எப்பொழுதும் வீட்டிலிருந்து நிகழ்காலத்தையே நோக்குகின்றாள். அவள் இன்பத்தையும், துன்பத்தையும், சஞ்சலத்தையும் தானே வருவித்துக்கொள்கிறாள். இதனாலும் அதிக உரோசமுடைமையாலும் மனைவிக்கு குடும்ப வாழ்க்கையை ஆரம்பிப்பது கடினமானது. கணவனோ வேறு தொல்லைகள் உள்ளவனாய் இருக்கும்போதும், மேற்கொள்ள வேண்டிய குடும்பப் பொறுப்புக்களைச் செய்து முடிக்கிறான்.

ஒரு பெண்ணிலும் பார்க்க ஆணுக்கு மேலதிக பெலன் பெருபாலும் குறைவாக இருக்கும். அவள் அதிக கஷ்டமின்றி ஒரு நேர உணவையோ அல்லது ஓரிரவு நித்திரையையோ ஒழிக்கக்கூடும். கணவன் வேலை முடிந்து வீட்டுக்கு வந்ததும் தாராளமாக உண்ண முன்னர் குடும்பக்கருமங்களில் கரிசனை எடுக்காவிட்டால் அவருக்கு அதிக ஆசை அல்லது பிடிவாதம் உண்டென்பது கருத்தல்ல. மனைவி அவருக்கு உணவு கொடுத்துக் குடும்ப விடயங்களைக் கூற வேண்டும்.

ஆக்கம்: ரி. டானியல் ஞானேஸ்
சுழிபுரம் பெரியபுலோ சனசமூக நிலையம்.

---

### பெண்

01. அகங்காரமுள்ள ஒரு படித்த பெண்மணி தன் கணவனுக்கும், தன் குழந்தைகளுக்கும், தன்தோழிகளுக்கும், தன் வேலைக்காரர்களுக்கும், எல்லோருக்குமே உபத்திரமானவள். -ரூஸோ-

02. மௌனம் பெண்ணுக்குச் சிறந்த ஆபரணம், ஆனால் அவள் அதை அணிய விரும்புவதில்லை. - டென்மார்க் பழமொழி



03. குடும்பத்தை மோட்சத்துக்கும் நரகத்துக்கும் இட்டுச் செல்பவர்கள் பெண்களே - காந்திஜி -

04. இன்பவீட்டைத் திறப்பவள் பெண்ணே - காந்திஜி -

05. ஒரு பெண் சரணடைகிறாள் என்றாள் வென்றுவிட்டாள் என்று பொருள் - ஆ. கம்மரோட்டா -

06. ஆண்மகனின் சிறப்பியல்புகளை உசுப்பி விட்டு அவர்களைக் கவரக்கூடிய ஆற்றல் உள்ளவளே பெண். - டால்ஸ்டாய் -

07. அழகான பெண் கண்களுக்கு விருந்து, குணமுள்ள பெண் இதயத்துக்கு இதம். அழகான பெண் ஆபரணம் என்றால் குணமான பெண் பொக்கிஷம். - நெப்போலியன் -

## மருத்துவம்

### மூலிகை வைத்தியம்



**1. காலில் ஆணிக்கூடு**

அம்மான் பச்சரிசிச் செடியின் (சித்திரப்பாவி) பாலை கால் ஆணிமீது காலை, மாலை மூன்று நாட்கள் போட்டு வந்தால் கால் ஆணி மறைந்துவிடும்.

மருதோன்றி இலையுடன் மஞ்சள், வசம்பு, கற்பூரம் கலந்து அரைத்து படுக்கப் போகும் முன் ஆணியுள்ள இடத்தில் வைத்துக் கட்டிகொண்டு காலை எழுந்து சுத்தப்படுத்தி வந்தால் சில நாட்களில் குணமாகிவிடும்.

**2. குடற்புண்**

குடற்புண் உள்ளவர்கள் கார உணவு உண்ணுதல். புகைப்பிடித்தல், தேனீர் குடித்தல், புகையிலை, போடுதல் இவைகளை நிறுத்த வேண்டும். காலையிலும் மாலையிலும் பால் சாப்பிடுதல் நன்று, வயிற்றில் புண் ஏற்பட்டால் வாயிலும் புண் ஏற்படும். ஒவ்வொரு நாளும் பகல் சாப்பாட்டிற்குப் பின்னர் கறுப்புத் திராட்சை ரசம் அரைப்பேணி மூன்று நாட்கள் சாப்பிட வயிற்றுப்புண், வாய்ப்புண் இரண்டுமே ஆறிவிடும்.

**3. குடும்பக்கட்டுப்பாடு**

எள், பப்பாசி, இவை கருவைக் கலைக்கும் வல்லமை பெற்றவை. சர்க்கரை சேர்த்த எள்ளுருண்டை, பப்பாசிப்பழம் அல்லது அன்னாசிப்பழம் இவற்றில் ஒன்றை உடலுறவு கொண்டபின் பெண் சாப்பிட்டு வந்தால் கருத்தரிப்பைத் தவிக்கலாம்.

**குருவி**

## மூக்கில் இரத்தம் வடிதல்


மூக்கில் அடிக்கடி சளி பிடித்தாலும், தடிமல் வந்தாலும் மூக்கிலிருந்து இரத்தம் வடியலாம். சிலருக்கு மூக்கில் நீர் சிந்தச் சிந்த மூக்கில் புண் உண்டாகிவிடும். இதன் காரணமாகவும் மூக்கிலிருந்து இரத்தம் வடியலாம். மூக்கில் விரலை நுழைத்து அழுக்கை எடுப்பது, எந்த நேரமும் மூக்கைக் குடைந்து கொண்டு இருப்பது, மூக்கினுள் தும்பு போன்ற பொருட்களை விட்டுத் தும்முவது போன்ற காரணங்களாலும் மூக்கிலிருந்து இரத்தம் வடியலாம்.

இவை தவிர மூக்கினுள் சதை வளருதல், கட்டிகள் ஏற்படுதல், மூக்கில் பலமாக அடிபடுதல், மூக்கின் நடுச்சுவரில் வளைவு, சைன்சைற்றிஸ் (Sinusitis), இரத்த உறைவுக் கோளாறுகள் ஆகியவற்றாலும் மூக்கில் இருந்து இரத்தம் வடியலாம்.

மூக்கிலிருந்து இரத்தம் வடியும் போது அந்த நபரை நாற்காலியில் உட்கார வைத்து, தலையைப் பின் பக்கமாகச் சாய்த்து, அவருடைய இரண்டு மூக்குத் துவாரங்களையும் பஞ்சினால் அடைத்து, அழுத்திப் பிடித்துக் கொள்ள வேண்டும். பாதிக்கப்பட்ட அந்த நபர் வாயின் வழியாகச் சுவாசிக்க வேண்டும். குளிர்ந்த நீரில் நனைந்த துணியை அல்லது ஐஸ் பையை மூக்கின் மேல் வைத்தால் இரத்தம் வடிவது உடனே நின்றுவிடும். பின்பு காது, மூக்கு, தொண்டை நிபுணரை (E.N.T. Doctor) அணுகி இரத்தம் வடிந்ததற்கான காரணத்தை அறிந்து அதற்குரிய சிகிச்சையைப் பெற்றுக் கொள்ளலாம்.

## வைத்திய துணுக்குகள்

- ❋ வயிற்றுப்புண் நோய்க்கு வெண் பூசனிக்காய்சாறு குடித்தால் நல்லது.
- ❋ மண்ணீரல் நோய்க்கு துளசியை நீரில் அலசிய பின் கசக்கிச் சாறு குடித்தல் நல்லது.
- ❋ மூக்கில் இரத்தம் வருவதைத் தடுக்க மாசக்காய் தூளை மூக்கில் வைத்து உறிஞ்சவும்.



## குறுங்காவியம்



# அது ஒரு நிலாக்காலம்




( 9 )

பல மாதங்கள் கடந்தன.
வாலிபர்கள் மத்தியில்
சலசலப்பு ஓய்ந்தது.
அருகினில்
செல்ல முடியாத குளிர்ச்சிபோலும் நிலா!
ஆனால்
ஓயவில்லை முகில்;
காதலெனும் காற்றில் திரிந்தது முகில்.
நிலாவின் மனது தெரியவேயில்லை.
படபடத்த முகில்
காதலுக்காய் ஏங்கியது,
பாடக்குறிப்பில் மனதை வைத்து
தூதுவிட்டது.
குறிப்பைப் பார்த்த நிலா
பதில் தரவில்லை - பேசாதிருந்தது.
முகில் வெட வெடத்து
கண்களில் மழை பொழிந்தது.



( 10 )

வானில் மிதந்துவரும் வெண்ணிலாவே
- எனது
காதலை நீ ஏற்றுவிடு என் நிலாவே
முகில்
கவிவரைந்தான்; தவமிருந்தான்;
ஒருதலைக் காதலோ?
என்றெண்ணித் தவித்தான்.
பள்ளிக்கு நிலா
இருநாட்கள் வரவில்லை.
முகிலனுக்கோ அந்நாட்கள்
கார்கால இருட்டுக்கள்.
சொல்லி வருவதில்லைக் காதல் - அது
வந்துவிடின்
சாதல் வரை ஓய்வதில்லையே.



( 11 )

இருநாட்கள்
முகிலனுக்கோ
இரண்டு வருடங்களாயின.
வாத்தியார் முகிலனை
கண்ணோடு நோக்கி
என்ன உனக்கு?
துன்பமோ சொல்? என்றார்.
பேச்சற்று இருந்தவனை
ஒரு குரல் ஈர்த்தது தன்பால்
ஓ..... துன்பம் தான் எங்கே போயிற்று...!
இருள் அகற்றிய ஒளி
நிலா அல்லவா!
வாத்தியார் திகைத்தார்
முகிலனைப் பார்த்தார்.


( 12 )

வகுப்பறையில் நுழைந்தாள்;
நறுமணம் தந்தாள்.
வாத்தியார் மெல்ல
நகைத்தபின் அகன்றார்.
இளசுகள் ஒன்றாய்
இருப்பதைத் தடுப்பானேன்?
இளகிய நெஞ்சம் கொண்டவர்
இவர் போலும்!
பிரார்த்தனை வேளையில்
தனித்தனர் இருவரும்.
இருளனோ வந்தான் பொறாமையும்
கொண்டான்.
இருவரின் நிலை பார்த்து
அதிபரிடம் சென்று
சகுனியின் வேலையைத்
தொடங்கினான் விரைந்து.

அ. சூரியன் ஆனைக்கோட்டை

( நிலா வருவாள்........)

# Let's Learn English



**Underline the correct word**

1. The medicine did not have any bad (affect, effect) on the patient.
2. Prince Charles is (air, heir) to the British (thrown, throne)
3. The naughty boy (through, threw) the ball into the (air, heir)
4. The wind (blew, blue) hard and the (boat, bought) was tossed about.
5. We must learn to the good (council, counsel) of our elders and betters.
6. Good (advise, advice) is very seldom much valued by childern.
7. Any citizen of SriLanka who is over eighteen (ears, years) to vote at elections.
8. My (father, farther) who is a farmer (things, thinks) that it is not (wise, vice) to spend money on my sisters.


**T. Dilani - Navaly.**

# The First Christmas Cards

The first recognized commercial Christmas card was produced in England in 1843 by Henry Cole, the founder of the Victoria and Albert Museum. It was a hand coloured print showing a family scence, flanked by scenes of Christmas charity. This was inscribed with the words: 'A merry Christmas and a happy New year to you" with space at the top to put the name of the recipient and at the bottom for the name of the sender. However, it was not until the 1860s that the Christmas card as we know it came in to being initially these were small cards with a simple greeting set within an embossed border. However as the demand for Christmas cards grew, the cards became larger and more elaborate.

The founder of the American Christmas card is said to be Louis Prong of Boston, who produced a wide variety of album cards and Visiting cards In 1875, he issued seasonal Greeting cards, which were on immediate success.

By 1880, the popularity of Christmas cards were such that many prominent artists of the time had their work reproduced in this form.



**by:- T. Dilakshi - Navaly.**

# பெயரின் முதல் எழுத்துக்குள் பொதிந்திருக்கும் குண நலன்கள்

**Q** இந்த சப்தத்திற்கு மேலே தூக்கிவிடுகிற சுபாவம் உண்டு. இதனோடு சேரும் மற்ற சப்தங்களை தெய்வீகமாக்கும். நல்ல பலனுடைய எழுத்துக்களுடன் சேராவிடில் சந்தேகத்தையும், குழப்பத்தையும் குறிக்கும். இதற்கு சிகப்பும், நீலமும் கலந்த வர்ணம் (பொதுவாக இந்த எழுத்து தமிழ் நாட்டுப் பெயர்களில் காணப்படுவதில்லை.)


**R** வெள்ளி நிறங் கொண்ட இந்த சப்தம் பெயரின் நடுவிலே வருவதைவிட ஆரம்பத்தில் வருவது மிகவும் கிரேக்ஷ்டம். இவர்களுக்குத் தூண்டுதல் தேவை இல்லை. முன்னுக்கு வரத் துடிப்பார்கள். தன்னை எல்லோரும் அறிய வேண்டுமென்று முயற்சி செய்வர். என்ன செய்ய வேண்டுமென்கிற நிச்சயம் இல்லாமலேயே சுறுசுறுப்பாக வேலைசெய்து கொண்டிருப்பார்கள். சுலபமாகப் பிறரைப் புரிந்து கொண்டிருப்பார்கள். தன்னிஷ்டப்படியே தான் எப்பொழுதும் நடக்க விரும்புவார்கள். விடாமுயற்சியும் தளராத ஊக்கமும் உடையவர்களாவார்கள்.

**J. காண்டீபன்**

தொடரும்.........

## இடங்களும் காரண இடுகுறிப் பெயர்களும்

கேல்வத்த :- அளவெட்டியில் கேல்வத்த என்ற இடம் உள்ளது. இது முன்பு சிங்களத்தல் "கெசல்வத்த" என்று அழைக்கப்பட்டது. கெசல் என்றால் வாழை, "வத்த" என்றால் தோட்டம். அதாவது வாழைத்தோட்டம் என்று பொருள். "கெசல்வத்த" பின் மருவி "கேல்வத்த" எனப்பட்டது. இன்று இக்கிராமம் "கலைநகர்" என புதிய பெயரைப் பெற்று விளங்குகின்றது.



மாவிட்டபுரம்:- பிறப்பிலேயே குதிரை முகம் கொண்ட மாருதப்புரவல்லி என்ற அரசியினுடைய குதிரை முகம் நீங்கிய பழயால் இவ்விடம் மாவிட்டபுரம் என அழைக்கப்படுகின்றது. அதாவது மா – என்றால் குதிரை. குதிரை முகம் விடுபட்ட இடமாகையால் மா – விட்ட – புரம்.



வெலி ஓயா :- இது தமிழ் மக்கள் குடியிருந்த இடம். அவ்வேளையில் இது மணலாறு என அழைக்கப்பட்டது. மணல் என்றால் சிங்களத்தில் "வெலி". ஆறு என்பது சிங்களத்தில் "ஓயா" என அழைக்கப்படுகின்றது. தற்போது இவ்விடம் சிங்களக் குடியேற்றக் கிராமமாகையால் "வெலி ஓயா" என அழைக்கப்படுகின்றது.

வெலிகந்த :- இது மட்டக்களப்பின் எல்லைப்புற கிராமம். முன்னொருகாலம் இங்கு அதிகம் மண்பிட்டிகள் காணப்பட்டன. இதனாலே இக்கிராமத்தைத் தமிழ் மக்கள் "மண் பிட்டி" என அழைத்தனர். காலப்போக்கில் இது மருவி "மன்னம் பிட்டி" என அழைக்கப்பட்டது. தற்போது இது சிங்கள மக்களால் "மனனம் பிட்டிய" அல்லது " வெலிகந்த" (வெலி–மண்;கந்த–பிட்டி) என அழைக்கப்படுகின்றது.






## அர்த்தமற்ற நட்பு

ஒருநாள் இரண்டு நண்பர்கள் காட்டுக்குள் நாவற்பழம் பொறுக்கச் சென்றிருந்தார்கள். ஒருவனுடைய பெயர் கண்ணன். மற்றவனுடைய பெயர் தாஸ். கண்ணன் கரடியை கண்டான். தாஸ் கரடியை காணவில்லை. கண்ணன் கூறினான் "தாஸ் அதோ கரடி வருகிறது. நான் மரத்திலே ஏறப்போகிறேன். நீ என்னாவது செய்" என்று சொல்லிவிட்டு கண்ணன் மரத்தில் ஏறினான். தாஸ் என்ன செய்வதென்று தெரியாமல் யோசித்துக் கொண்டிருந்தான். உடனே இறந்தவர் போல் கண்ணை மூடிக்கொண்டு நிலத்தில் படுத்துவிட்டான். கரடி வந்து மணந்து பார்த்துவிட்டுச் சென்றது. கண்ணன் மரத்திலிருந்து இறங்கினான். கண்ணன் தாஸிடம் "கரடி உன் காதுக்குள் என்ன கூறியது?" என்று கேட்டான். அவன் அதற்கு "உன்னைப் போல் ஆபத்துக்கு உதவாத நண்பனோடு சேர வேண்டாம் என்று கரடி கூறியது" என்று தாஸ் கூறினான். இருவரும் பிரிந்து இரண்டு பக்கங்களில் சென்றனர். "ஆபத்தில் ஒருவனுக்கு உதவுதல் வேண்டும்"

செ. சுகந்தி, சங்குவேலி.

**உங்களுக்குத் தெரியுமா?**

✻ இரண்டு கண்ணாடித் தகடுகளின் இடையே மெல்லிய திரவப்படலம் இருக்கும் போது அவற்றைப் பிரித்து எடுப்பது கடினம். ஏன் தெரியுமா? காரணம் அவற்றின் பரப்பு இழுவிசை. (Surface Tension)

✻ 1943ல் இரண்டாம் உலகப்போர் நடைபெற்றது. அவ்வேளையிலேயே இங்கிலாந்தில் முதல் மின்னணு கணனிப்பொறி கண்டுபிடிக்கப்பட்டது. அதன் பெயர் கொலாசஸ் (Colossus). ஆனால் அதை வெளியில் தெரிவிக்காமல் மிக இரகசியமாக வைத்திருந்தார்கள். ஏனெனில் அது எதிரிகளின் இரகசிய வார்த்தைகளை உடைக்கக் கூடியதாக இருந்தது.

✻ பிரான்சின் 15ம் லூயி மன்னரின் (1710-1774) உபயோகத்திற்காக கண்டுபிடிக்கப் பட்டதே "லிப்ற்" எனப்படுகிறது.

✻ உலகில் அதிக அளவு மீன் உற்பத்தியில் முதலிடம் பிடிக்கும் நாடு சீனா. இரண்டாவது இடம் இந்தியாவிற்கு. மீன் உண்பதில் முதலிடம் பிடிப்பதும் சீனாதான்.

✻ ஒரு குறிப்பிட்ட பரப்பளவை எடுத்துக்கொண்டால் அதில் $\frac{1}{3}$ பங்கு காடுகளாக இருக்கவேண்டும். இது சுற்றுச் சூழல் பாதுகாப்பு அமைப்புக்களின் கணிப்பு.

✻ ருவாண்டா மற்றும் பருண்டியில் உள்ள டுஸ்டி இனத்தவர்தான் உலகில் அதிக உயரமானவர்கள். இவர்களின் சராசரி உயரம் 183 cm.

## வாழ்க்கைக்கு உகந்த பொன் மொழிகள்

1. அரண்மனை அடிமைகளை விட குடிசை வாழ் ஏழை உயர்ந்தவன்.
2. ஆண்பாதி, பெண்பாதி என்பது வாழ்வின் நியதியாகும்.
3. இனம் எதிர்பார்ப்பவன் ஒருபோதும் முன்னேற மாட்டான்.
4. ஈன்ற தாயும் நாடும் போற்ற நட.
5. உன் வீடாயினும் கொல்லை வழி நுழையாதே.
6. ஊக்கம் என்பது வெற்றியின் முதற்படி.
7. எது நீ செய்யினும் விளைவு நலம் தரணும்.
8. ஏனென்ற கேள்வியுடன் எதையும் ஆராய்ந்து பார்.
9. ஐக்கியம் இல்லாவிட்டால் வெட்கித் தலை குனிவாய்.
10. ஒழுக்கம் குறைந்தவர் இழுக்கை அடைவார்
11. ஓய்வற்று இயங்கும் இயந்திரம் விரைவில் தேய்ந்து விடும்.
12. ஔடதம் என்பது கசந்தபின் இனிக்கும்.

நா. ஜெசிந்தா
யா/ மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை

**தேடல் 6**



# விடுதலை

"ஆடுவோமே பள்ளுப்பாடுவோமே ஆனந்த சுதந்திரம் அடைந்து விட்டோமென்று ஆடுவோமே," பாரதியின் விடுதலையின் தேடல் படைப்புக்கள் அனைத்திலும் இழை யோடிக் கிடக்கின்றது என்று விவிலியம் கூறுகின்றது. (உரே: 22) துன்பம் வரும்போது விடுதலை வேட்கையுண்டாகும். துன்பப்படுத்து பவர்களிடமிருந்து துன்பப்படுபவர் விடுதலை வேண்டிப் போராடுவது மனித உரிமை.

மனித உரிமை மறுக்கப்படும்போது போராடுவது உரிமைப் போராட்டம். உரிமை மறுக்கப்பட்ட சமூகத்தின் ஒன்றுபட்ட விடுதலை வெற்றி நோக்கிப் பயணம் செய்யும்.

எந்த விடுதலை வரலாறும் துன்புறும் மக்களின் அங்கீகாரமல்லாமல் வெற்றியடைந்த தில்லை. துன்புறும் மக்களின் ஒன்றுபட்ட அங்கிகாரம் இல்லாதவரை மனித உரிமைப் போராட்டம் பின்நோக்கியே நகர்ந்து கொண்டிருக்கும்.

எந்த மனித உரிமைப் போராட்டமும் தலைமை இல்லாமல் நடைபெறுவதில்லை. இழப்புக்களும் துன்பங்களும் இல்லாமல் மறுக்கப்பட்ட மனித நீதி கிடைப்பதில்லை.

மனித உரிமை மறுக்கப்பட்ட ஒரு சமூகம் அடிமை. சுயாதீன சுதந்திரவாழ்வு விரும்பும் சமூகம் போராடியே ஆகவேண்டிய சமூகம். போராட்டமென்பது புனிதமானது. மனிதத்தைக் காப்பது, கியூபாவின் மனித உரிமை சுறண்டப்பட்டது. அவர்களின் நீதி மறுக்கப் பட்டது. பொருண்மியம் பறிக்கப்பட்டது. அடக்கு முறை அநாகரிகவாழ்வானது. கியூபா மக்களின் முழுமையான அங்கீகாரம் கிடைத்ததால் பிடல் கஸ்ரோவின் தலைமை 1959ஆம் ஆண்டு கியூபா மக்களுக்கு விடுதலை வாழ்வைப் பெற்றுத்தந்தது.

எதிர்ப்புக்களையும் துன்பங்களையும் கசப்பாகக் கருதாதவனே மீட்பியலாளன். இது கியூபாவின் வரலாறு. முதலாம் உலகப்போரில் யேர்மனி இங்கிலாந்திடம் படுதோல்வி கண்டது. இத்தோல்விக்குக் காரணம் இரைசியா என்று கண்ட ஜேர்மனி இரண்டாம் உலகப்போரில் இரைசியாவின் மேல் படையெடுத்தது. இரண்டாம் உலகப்போரின் காலம் 1939 - 45. தன்னாட்டு உணர்வுடனும் மக்களின் அங்கீகாரத்துடனனும் ஸ்ரலின் போரை எதிர் கொண்டு ஜேர்மனியைத் தோல்விகாணும்படி செய்தார். அடக்குமுறை வெறியை அடங்கவைப்பது மக்களின் அங்கீகாரமுள்ள போராட்டம் என்பதை இரண்டாம் உலக்போரின் இரைசிய வெற்றி சொல்லிக்கொண்டே இருக்கின்றது. 1994இல் மக்களின் முழுமையான அங்கீகாரத்துடன் நெல்சன் மண்டெலாவின் தலைமை தென்னாபிரிக்க மக்களின் நீதியின் வாழ்வை நிலைவாழ்வாக்கியது. இருபத்தேழு வருடச் சிறைவாழ்வை மண்டெலா நிறை வாழ்வாகவே கண்டார். நீதி மறுக்கப்பட்ட வர்களின் நீதிக்காகத் துன்பப்பட்டவர் நெல்சன் மண்டெலா.

நீதி மறுக்கப்பட்டவர்களின் நீதிக்காகப் போராடி வெற்றிகாணப்புறப்பட்ட தலைமைகளுக்கு உதவி மக்களங்கிகாரம் அரசியல் பொருளாதார சமூக நீதியை இழந்த மக்களின் ஒட்டுமொத்த அங்கீகாரம் இல்லையென்றால் துன்புறும் மக்களின் அங்கீகாரம் இல்லாமல் ஒன்றுபட்ட அங்கீகாரம் இல்லாமல் கடவுளும் விடுதலை வரலாற்றுடன் இணைந்து செயற்படுவதில்லை.

எப்பெருமான் இயேசு பாதிக்கப்பட்ட நீதி மறுக்கப்பட்ட ஓரம் தள்ளப்பட்ட மக்களின் தலைவனாகவே செயற்பட்டார். மீட்பியலின் வரலாற்றை நிறைவு செய்யுமுன் எருசலேமுக்குப் பவனியாகச் சென்றார்

அப்போ துன்பப்பட்ட மக்கள் கூட்டம் ஒன்று கூடியது. எம்பெருமான் இயேசு நிறைவு செய்யப்போர் கடவுளின் மீட்பியல் திட்டத்துக்கு மக்கள் அங்கீகாரம் கொடுத்தார்கள்.

(மாற் 11:-11)

துன்புற்றமக்கள் ஓசான்னா என்று ஒன்றுபட்ட குரலை எழுப்பினார்கள் (ஓசான்னா - எங்களை விடுவியும்) விடுதலையின் இதயக்குரல் கிறிஸ்து பெருமானில் கடவுள் நிறைவேற்றவிருந்த மீட்பியல் திட்டத்தை விரைவாகச் செய்வதற்கு அனுமதி வழங்கியது. துன்புறும் மக்களின் ஒன்றுபட்ட குரலும் அங்கீகாரமும் வழங்கப்படாதவரை துன்புறும் மக்களுக்கான விடுதலை தூரப்பயணம் செய்யும்.

**ஆ.வே இயேசுதாசன், உடுவில்.**

# கவியருவி

## துடைத்தெறி கண்ணீரை பெண்ணே!



மூடச்சிறைக்குள் முடங்கி
உன் முகத்துக்கு
முக்காடிடுகின்றாயா?
நாடாளும் பெண்கள் நடுவே
வீடாளக் கூடத் தகுதி இன்றி
நீ விம்மிக் கலங்குவது ஏன்?
ஆனையை அடக்கிய அரியாத்தையும்
புலியை முறத்தால் கொன்றவளும்
இலக்கியங்களில் மட்டும்தானா......?
வாய்திறந்து சொல் உயிரே
இரட்டைப் பின்னலிட்டு
கண்களுக்கு மையெழுதி
உதட்டுச் சாயத்தால் மிகைப்படுத்தி
கவர்ச்சி காட்டத்தானா முடியும் உன்னால்?
எடுத்ததுக்கும் கண்ணீர் சிந்தி
உன் வாழ்நாளதை வீணாக்கி விடாதே.
கண்ணீரென்ற ஆயுதத்தைத் தூக்கி
எறிந்து விட்டு
தன்னம்பிக்கையுடன் நீ நிமிர்ந்தால்
வீடாளமட்டுமல்ல
நாடாளும் தகுதியையும் பெறுவாய்.



ஜிந்து சிவகுமார். 11A
யா / சுதுமலை சிந்மய பாரதி
வித்தியாலயம்.

## அம்மா

அம்மா என்பது அழகிய தமிழ் - அதில்
அமிழ்ந்து கிடப்பது தாய்மைக்குப் பொருள்
சும்மா பார்த்தால் மனித உடல் - அதை
சூழ்ந்து நிற்பது பாசத்தின் மதில்.
பத்துத் திங்கள் சுமந்து பெற்று
பாலூட்டி வளர்த்த அம்மா!
பத்தும் பெற்றுப் பாரினில் உயர
முற்று முழுதாய் உழைக்கும் அம்மா!
உனது அன்புக்கு ஈடு எதுவுமே இல்லை - காட்டும்
அன்புக்குத் தானும் எல்லையும் இல்லை.
அகிலத்தில் உனது அன்பே - என்றென்றும்
அழியாத பேரன்பாய் நிலைத்து நிற்கும்!
கைமாறு கருதாச் சேவை செய்யும்
கண்கண்ட தெய்வம் நீதான் அம்மா!

செல்வநாயகம் ரவிசாந் (இளங்கவிஞன்)
வீரமனை, குப்பிளான்.

## என் மனமே......!



கலைகளின் உறைவிடங்களே
கல்வியின் படிமங்களே
விழி விழித்துக் காத்திருந்து
படித்த நாள் கனிந்திடுமோ!
A/L தனைக் கடந்து
போகும் வழி விட்டிடுமோ!
வரும் நாள் இனிதாக
கோபங்கள் ஆறிடுமோ!
காலம் எனும் வரையறை
வழிதான் சொல்லிடுமோ!
நாவினால் சுட்டபுண்
ஆறாது கலங்கிடுமோ!
கலங்குவதும் ஆறுவதும் - இனி
என்கையில் தங்கிடுமோ!
எத்தனை எத்தனை எண்ணங்கள்
என்மனதில் மறைந்திடவே
சொல்ல ஒரு வார்த்தை தேடி
தவிக்கின்றதே என்மனமே......!

R. Sri - Y.M.C.A

## நட்பு




வயது வேறுபாடின்றி
உயிரிலே கலந்து
ஆயுள் வரைக்கும்
தொடரும் பந்தம்

P. சஜீவன்
யா/ இந்துக்கல்லூரி

# கிறிக்கெட் வரலாற்றில் சுவையான தகவல்கள்

**நடுவர் வெட்டிய தலைமயிர்**

கிறிக்கெட் விளையாட்டில் துடுப்பாட்ட வீரருக்கு எதுவிதமான தடைகளையும் யாரும் செய்யக்கூடாது. "போலர் போட்டிருக்கும் கண்ணாடி தனக்கு இடைஞ்சலாக இருக்கிறது" என்று துடுப்பாட்ட வீரர் நடுவரிடம் முறையிட்டால் நடுவர் அதை அகற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும். "சூரிய ஒளி கண்ணில் படுகிறது" என்றால் "ஒளித்தடுப்பு பலகையை" மறைவுக்கு இழுத்துவிடவேண்டும்.



ஒரு தடவை இந்திய ஆட்டக்காரர் சுனில் கவஸ்கர் "பட்" செய்து கொண்டிருந்தார். அவர் நீளமாக வளர்த்திருந்த தலைமுடி அவர் கண்களை அடிக்கடி மறைத்தது. அவர் அடிக்கடி கைகளால் அதை மேலே எடுத்து விட்டு விளையாடிக் கொண்டிருந்தார். இதை அவதானித்த நடுவர் தன்னுயை பொக்கெற்றுக்குள் இருந்து கத்தரிக்கோலை எடுத்து, கவஸ்கரின் அருகே சென்று முன்னுக்கு வந்து தடைசெய்து கொண்டிருந்த அவரது தலைமயிரை (அவரைக் கூடக் கேட்கவில்லை) அப்படியே வெட்டி தன்னுடைய பொக்கெற்றுக்குள் வைத்துக் கொண்டு போய்விட்டார். பாவம் கவஸ்கர்! ஏங்கிப் போனார்.

இன்றைக்கு யாராவது "பட்ஸ்மன்" நடுவரிடம் அப்பீல் பண்ணினால் இலங்கையின் லசித் மலிங்கவின் தலை மயிருக்கும் ஆபத்து ஏற்பட இடமுண்டு. "மலிங்க அவதானம்"

**அசட்டு நம்பிக்கை**

தாம் திறமையாக விளையாட, சில நம்பிக்கைகளை வீரர்கள் பழக்கமாகக் கொண்டுள்ளனர். சுனில் கவஸ்கரும் மேற்கிந்தியத் தீவுகளின் விவியன் ரிச்சர்ட்ஸூம் தாம் விளையாடும் ஒவ்வொரு ஆட்டத்திலும் ஏதாவது ஒன்றை புதிதாக அணிந்து கொள்வர். ஒன்றுமே இல்லாது விட்டால் தங்களது காலணிகளின் நாடாக்களையாவது புதிதாக அணிந்து கொள்வர். இதில் ஒரு நம்பிக்கை.

**அதி கூடிய தனிநபர் ஓட்ட சாதனை**

| இல | ஓட்டங்கள் | வீரரின் பெயர் | அணிகள் | இடம் | காலம் |
|---|---|---|---|---|---|
| 1 | 194 | சயிட் அன்வர் | பாகிஸ்தான் எதிர் இந்தியா | சென்னை | 1996 - 97 |
| 2 | 189* | விவியன் றிச்சட்ஸ் | மே.இ.தீவுகள் எதிர் இங்கிலாந்து | மன்செஸ்ரர் | 1984 |
| 3 | 189 | சனத் ஜெயசூரிய | இலங்கை எதிர் இந்தியா | சார்ஜா | 2000 - 01 |
| 4 | 188* | ஹரி கிறிஸ்ரன் | தென்ஆபிரிக்கா எதிர் டுபாய் (UAE) | ராவல் பின்டி | 1995 - 96 |
| 5 | 186* | சச்சின் டெண்டுல்கர் | இந்தியா எதிர் நியூசிலாந்து | ஹைதராபாத் | 1999 - 00 |

Sourc : Cricinfo.com- Last up dated : 11 October 2007

தொகுப்பு :- ஏயெஸ்ரி

தொடரும் .........

சிறுகதை

# காலம் வந்தது!

(மகாகவி ரவீந்திரநாத் தாகூரின் 'உபகுப்தா' (Upaguptha) என்ற ஆங்கிலக் கவிதையின் கருவை அடித்தளமாக வைத்து எழுதப்பட்டது)

**வா**னம் எது, பூமி எது என்று தெரியா வண்ணம் தடித்த காரிருள் மண்டிக் கிடக்கும் நடுநிசி.

அந்த நகர் என்னும் அழகிய இள நங்கையை இருள் என்னும் கொடிய அரக்கன் தனது முரட்டுப் பிடியினால் மூர்ச்சையாக்கிவிட்டான் என்பது போன்ற அமைதியும் அதில் ஜனித்த ஒரு வகைப் பீதியும் அங்கு நிலவின.

எல்லாம் துறந்த நிலையில் வேறோர் உலகில் சஞ்சாரம் செய்யும் உபகுப்தர் பிட்சா பாத்திரத்தை தலைக்கு அணையாக வைத்து அந்த நகரத்து ஒரு வீதியின் ஓரத்தே உறக்கத்தில் கிடக்கின்றார்.

இருட் திரையிலே நெற்றிப் பொட்டுக் கணியத்தில் பொத்தல் ஏற்பட்டாற் போன்ற ஓர் ஒளிக்கீற்று தெரிகின்றது. அந்த ஒளி மின்மினிப் பூச்சியாக அசைந்து முன்னேறி வருகின்றது. சிறு பொட்டு, பெரிய பொட்டாகி இப்போது "கிணுங்" "கிணுங்" என்ற ஓசை கேட்கும்படி அப்பொட்டு மேலும் பெரிதாகி... "கிணுங்" ஓசை மடிய அது இப்போது உபகுப்தரின் முகத்தின் எதிரே ஒரு விளக்காக நிற்கிறது.

அந்த விளக்கை கண்கவர் வளையல்களும், மோதிரங்களும் பூண்ட ஒரு மலர்க்கரம் தாங்கி நிற்கின்றது.

இன்னொரு மலர்க்கரம் வளையல்கள் சிரிக்க உபகுப்தரின் மார்பை மெல்லத் தொடுகின்றது.

அழித்தெழுதா ஓவியம் உயிர் பெற்று வந்து நிற்கிறதா? பொன் விளக்கொன்று அசைந்து வந்து கைவிளக்குடன் நிற்கின்றதா?

அவள் ஒரு நடனப்பெண். சந்தன நிறமேனியின் செழுமையான அங்கங்கள் தெரியும் வண்ணம் மெல்லிய நீலப்பட்டாடையால் போர்த்திருந்தாள். அதில் தெளிக்கப்பட்ட உயர் ரக வாசனைத்திரவியம் கமழ்கிறது. புன்னகை முத்தினை உதிர்த்து தேனிசைக்குரலில் அவள் பேசினாள்:

"சுவாமி இளமை பூரிக்கும் தங்கள் தங்கம் நிகர் மேனியில் இந்த வீதியின் புழுதி படக்கூடாது. எழுந்து வாருங்கள். தங்கள் மேனிக்கு ஏற்ற பஞ்சணை தருவேன். எழுந்து என்னுடன் வாருங்கள்"

முகத்தில் எத்தகைய பாவமும் அற்றவராக ஓவியம் போல் இருந்த உபகுப்தர், "காலம் வரும் போது உன்னிடம் நான் வருவேன். நீ இப்போது போய்விடு" என்றார்.

அவரது சாந்தமான வார்த்தைகள் வகை சொல்ல முடியாத ஆயுதங்களின் வீச்சாக அவளின் இதயத்தைத் தாக்க அவற்றிக்கு முகங்கொடுக்க முடியாதவளாக காலில் அணிந்திருந்த சதங்கை கிணுங், கிணுங் என்று புலம்ப அவள் மெல்லென நடந்தாள். மின்மினிப் பூச்சியாக விளக்கு அசைந்து சிறு பொட்டாகி மறைந்தது. மீண்டும் இருளும் அமைதியும் கவ்விக்கொண்டன.

காலமென்னும் காட்டாறு வேகமாக ஓடிச்சென்றது. பல முழு நிலவுகள் வந்து சென்றன.

இயற்கை அன்னை பசுந்தளிர் புனைந்து வண்ண வண்ண நறுமலர்களைச் சூடி பூங்குயில்கள் கூவ எழிலாட்சி புரியும் அந்த இளவேனில் காலத்து மயக்கும் மாலைப் பொழுதில் மாலை மதியம் அடிவானில் நகை சிந்தி எழுந்து வந்தது.

அந்த நகரத்து வீதிகளில் இங்குமங்குமாக நகர்ந்து செல்லும் மக்கள் கூட்டமும், பரப்பரப்பாக வியாபாரம் நடைபெறும் அங்காடிகளும், நகரமாகிய அப்பெண்மணிக்கு நகைகள் அணிந்தமை போல் ஏற்றப்பட்ட வீதி விளக்குகளும் அழகின் உயிர்ப்பாகத் திகழ்ந்தன.

வீதியில் விலை மாதர் மேனி மினுக்கி, கவர்ந்திழுக்கும் உடையணிந்து, புன்னகை சிந்தி மான்விழி எறிந்தவராய்ச் சென்று கொண்டிருந்தனர்.

ஒரு பிரேத ஊர்வலம் வருகிறது. அந்த ஊர்வலத்தில் இனிமையாக ஓதப்படும் சுலோகங்களில் பக்தியும், வாழ்வின் அநித்தியமும் மனதைத் தொடுவனவாக உள்ளன. அவர்கள் கொண்டு செல்லும் தூபத்தின் வாசனைப்புகை நறுமணம் பரப்பி மனித வாழ்வுபோல் காற்றில் கரைகின்றது.

லயப்பட்ட மனதின் வெளிப்பாடென உபகுப்தர் நடையில் கம்பீர லயத்துடன் இவற்றையெல்லாம் கடந்து சென்று கொண்டிருந்தார்.

(தொடரும்.....


— நவாலியூர் நடேசன் —

## சிரிக்க சிந்திக்க

**தம்பி :-** அண்ணா! அப்பாவை "மேல வோட்டில" விட்டிருக்கு என்று சொன்னாய். நான் போய் எல்லா மேல் வோட்டிலையும் பாத்திட்டன் அப்பாவைக் காணவில்லையே.

**அண்ணா:** அட தம்பி! அப்பாவ "Male Ward"இல விட்டிருக்கின்டெல்லே சொன்னனான். அது ஆண்களுடைய "வோட்."

## SMS JOKES



Fish ellainna Sea waste
Stars ellainna sky waste
Flowers ellainna Garden waste
Vadivel ellainna Commedy waste
Lovers ellainna life waste
Nee ellainna Zoo waste
Aha...... Aha....



**S. Kamsha, Arts 2008 Manipay.**

## நகைச்சுவை விருந்து

ஒருநாள் நான் hotel ல் ice cream குடித்துக் கொண்டிருக்கும் போது எனக்கு எதிரே ஒரு அழகான பெண் ஒருத்தி அமர்ந்திருந்தாள். அவளுடைய அழகைப் பார்த்து அவளிடம் Autograph வாங்கச் சென்ற வேளையில், அது நான்தான் என்று எனக்குத் தெரிந்தது. அவ்வுருவம் கண்ணாடியில் தெரிந்த எனது விம்பமே.

**By - K.U.F.E.B.S.A.D**

## எப்பொழுதும் ஜெயிக்க



ஒருவர் :- "சீட்டாட்டத்தில் ஒருநாள் ஜெயிச்சால் இன்னொரு நாள் தோத்துப் போயிடறேன்"



மற்றவர் :- "அப்படின்னா ஒருநாள் விட்டு ஒருநாள் விளையாடேன்"

## சொல்வதைச் செய்யுங்கள்

இப்போ உங்களுடைய வீட்டிலுள்ள பூந்தோட்டத்திற்குள் செல்லுங்கள். அழகான 100 சிறிய பூக்களைப் பறித்துக்கொள்ளுங்கள். சரி, இப்போ உங்கள் வீட்டிற்குள் செல்லுங்கள். ஊசியையும், நூலையும் கையில் எடுத்துக்கொள்ளுங்கள். நீங்கள் பறித்த பூக்களை ஒவ்வொன்றாக நீங்கள் எடுத்துக்கொண்ட நூலில் கோர்த்துக்கொள்ளுங்கள். இப்போ உங்கள் கையிலே ஒரு அழகான பூமாலை இருக்கின்றதல்லவா???

ஆஹா! எவ்வளவு அழகு என்று நினைத்தவாறு நீங்கள் முகம் பார்க்கும் கண்ணாடியின் முன்னாலே சென்று நில்லுங்கள். இப்போ எப்படித் தோன்றுகின்றது???.... குரங்கின் கையிலே பூமாலை இருக்கின்றது போல தோன்றவில்லையா!!!...

## O/L பாஸ் பண்ணிட்டியா?



**ஆசிரியர் :-** நீ இரண்டு வருஷமா ஓ.எல் படிக்கிறாய். எப்போ பாஸ் பண்ணப் போறாய்?



**மாணவன்:** சேர்! நீங்கள் எப்ப பீ.எச்.டி பாஸ் பண்ணுறியளோ அப்ப நான் ஓ.எல். பாஸ் பண்ணுவன்.

## மாம்பழக் கணக்கு தெரியாது

தந்தை :- ஒரு சின்னக் கணக்கு சொல்லுறேன். போடறியா?

மகன் :- சொல்லுப்பா



தந்தை :- எங்கிட்ட பத்து மாம்பழம் இருக்கு, அவற்றுள் ஆறை இன்னொருவருக்குக் கொடுத்து விட்டால் மீதி என்னிடம் எவ்வளவு இருக்கும்.



மகன் :- எனக்கு தெரியலேப்பா எங்க பள்ளிக்கூடத்தில் ஆப்பிள் பழத்தை வைச்சுத்தான் கணக்குப் போடுவாங்க.

அட்டைப்பட விளக்கம்

# உலக அதிசயம் தாஜ்மஹால்



ஷாஜகான்

ஜகாங்கீரின் மூன்றாவது மகன் ஷாஜகான். இவருடைய தாய் ஜகத்ஹோசைன் என்ற ராஜபுத்திர பெண்மணி. ஷாஜகான் மன்னராவதற்கு 16 அண்டுகளுக்கு முன்பே (1612–ல்) அவருக்கும் மும்தாஜூக்கும் திருமணம் நடந்து விட்டது. ஆக்ரா அரண்மனையில் நடைபெற்ற ஒரு கண்காட்சியில் இருவரும் சந்தித்தனர். இந்த சந்திப்பின்போது அரும்பிய காதல் திருமணத்தில் முடிந்தது.

மும்தாஜின் இயற்பெயர் அர்ஜூமான் பானு பேகம் என்பதாகும். ஷாஜகான், தானே தன் காதல் மனைவிக்கு "மும்தாஜ் மஹால்" என்ற பெயரைச் சூட்டினார். மும்தாஜ் மகால் என்றால் "அரண்மனையின் அணிகலன்" என்று பொருள். இருவருமே உயிருக்கு உயிராக நேசித்தனர். தன் கணவரின் பணிகளில் மும்தாஸ் மிகுந்த ஈடுபாடு கொண்டு, உறுதுணையாக இருந்தாள்.

ஷாஜகான் போருக்குச் சென்ற போதெல்லாம் மும்தாஜூம் உடன் சென்றாள். கணவனை விட்டுப் பிரியாமல், உறுதுணையாக இருந்தாள். போரில் ஷாஜகான் பல துன்பங்களை அனுபவிக்க நேர்ந்தது. அந்தத் துன்பங்களையெல்லாம் மும்தாஜூம் பகிர்ந்து கொண்டாள்.

## 14 குழந்தைகள்

ஷாஜகான் பட்டத்துக்கு வந்த பின், அவருக்கு மந்திரி போல் ஆலோசனைகள் கூறி வந்தாள் மும்தாஜ். நீதி வழங்குவதில் தன் கணவருக்கு எவ்வித கெட்ட பெயரும் வந்துவிடக்கூடாது என்பதில் கவனமாக இருந்தாள்.

அவள் இரக்க குணம் மிக்கவள். உதவி நாடி வருவோருக்கெல்லாம், வாரி வழங்குவாள்.

ஷாஜகானும் மும்தாஜூம் மலரும், மணமும் போல், நகமும், சதையும் போல், 19 ஆண்டுகள் இணை பிரியாமல் வாழ்ந்தனர். அவர்களுக்கு 14 குழந்தைகள் பிறந்தன.

அந்தக் குழந்தைகளில் 7 குழந்தைகள் பின்னர் இறந்து விட்டன. 14–வது குழந்தை பிரசவத்தின்போது, மும்தாஜ் மரணம் அடைந்தாள். அப்போது அவளுக்கு வயது 37.

## தாஜ்மஹால்

அருமை மனைவியின் மறைவு, ஷாஜகானை ஆறாத்துயரத்தில் மூழ்கச் செய்தது. அந்தத் துன்பத்தில் இருந்து அவரால் மீளவே முடியவில்லை.

இரண்டு ஆண்டுகள் வரை அவர் புத்தாடைகள் அணியவில்லை, விருந்துகளில் கலந்து கொள்ளவில்லை.

தன் மனைவிக்கு உலகத்தில் எங்கும் இல்லாத அழகிய நினைவுச் சின்னம் எழுப்பத் தீர்மானித்தார். நினைவுச் சின்னம் எவ்வாறு இருக்க வேண்டும் என்று, புகழ்பெற்ற சிற்பிகளுடனும், கட்டடக் கலைஞர்களுடனும் கலந்து ஆலோசித்தார்.

## 21 ஆண்டுகள்



மும்தாஜ்

தாஜ்மஹாலைக் கட்டும் வேலை 1632–ல் தொடங்கியது. இந்தியா, பாரசீகம் ஆகிய நாடுகளைச் சேர்ந்த கட்டடக்கலைஞர்கள் தலைமையில் சுமார் 20 ஆயிரம் தொழிலாளர்கள் இதை அமைக்கும் பணியில் ஈடுபட்டனர்.

முழுவதும் பளிங்குக் கற்களால் தாஜ்மஹால் கட்டப்பட்டது. இதைக் கட்டி முடிக்க மொத்தம் 21 ஆண்டுகள் ஆயிற்று. அந்தக் காலத்திலேயே தாஜ்மஹால் கட்டுவதற்கு ஆனசெலவு ரூ 3கோடி.

1653ல் கட்டி முடிக்கப்பட்ட தாஜ்மஹால், எந்த நாட்டிலும், எக்காலத்திலும் நிறுவப்படாத ஒரு அரிய நினைவுச் சின்னமாக உலக அதிசயமாகத் திகழ்கிறது. மும்தாஜ் மஹால் 1631–ல் இறந்தபோதும், அவள் உடல் தற்காலிகமாக பர்ஹாம்பூரில் அடக்கம் செய்யப்பட்டது. தாஜ்மஹால் கட்டி முடிக்கப்பட்டபின், அவள் சவப்பெட்டி மீண்டும் தோண்டி எடுக்கப்பட்டு, தாஜ்மஹாலில் அடக்கம் செய்யப்பட்டது.

## அவுரங்கசீப்

ஷாஜகானுக்கு அவுரங்கசீப் உள்பட 4 மகன்கள். யார் பட்டத்துக்கு வருவது என்று அவர்களுக்குள் நடந்த சண்டையில் அவுரங்கசீப் வெற்றி பெற்றார். அப்போது ஷாஜகான் ஆக்ரா கோட்டையில் இருந்தார். தாஜ்மஹால் கட்டி முடிக்கப்பட்டு ஐந்தாண்டுகள் ஆகியிருந்தன. ஆட்சியைக் கைப்பற்றிக்கொள்வது என்ற முடிவுக்கு வந்தார் அவுரங்கசீப் . தந்தை இருந்த ஆக்ரா கோட்டையை ஷாஜகானின் விசுவாசிகளைக் கொண்ட படை காவல் காத்து வந்தது. தன் முற்றுகை வெற்றி பெற வேண்டும் என்பதற்காக, ஆக்ரா கோட்டைக்கு யமுனை நதியில் இருந்து தண்ணீர் செல்லும் வழியை அடைத்துவிட்டார் அவுரங்கசீப். ஆக்ரா கோட்டையில் இருந்த ஷாஜகானும். அவருடைய ஆதரவுப் படைகளும் தண்ணீர் இன்றித் தவித்தனர்.

படைவீரர்கள், ஷாஜகானை அனுகி இதற்கு ஏதாவது பரிகாரம் காணும்படி கேட்டுக் கொண்டார்கள்.அதைத் தொடர்ந்து, மகன் அவுரங்கசீப்புக்கு ஷாஜகான் உருக்கமாக ஒரு கடிதம் எழுதினார்."நேற்றுவரை நான் ஒன்பது லட்சம் பேர் கொண்ட பெரும் படையின் தலைவனாக இருந்தேன். இன்று ஒரு குவளைத் தண்ணீருக்கு ஏங்கி நிற்கிறேன்" என்று அதில் குறிப்பிட்டிருந்தார்.

இந்தக் கடிதத்திற்கு அவுரங்கசீப், "எல்லாம் உங்கள் செயலால் விளைந்ததுதான்" என்று ஒரே வரியில் பதில் எழுதினார்.பிறகு, வேறு வழியின்றி ஆக்ரா கோட்டையை, அவுரங்கசீப்பிடம் ஷாஜகான் ஒப்படைத்தார். ஷாஜகானை சிறை வைத்துவிட்டு, 1658 ஜூலை 21ந் தேதி அன்று மொகலாயச் சக்கரவர்த்தியாக முடி சூட்டிக்கொண்டார் அவுரங்கசீப்.

ஷாஜகான் சிறை வைக்கப்பட்ட இடத்திலிருந்து பார்த்தால் தாஜ்மஹால் தெரியும். அதைப்பார்த்துக் கொண்டே தன் வாழ்நாளைக் கழித்தார் ஷாஜகான். அவருக்கு உதவியாக சிறையில் உடன் இருந்தவர் அவருடைய மூத்த மகள் ஜகனாரா பேகம். எட்டு ஆண்டுகள் சிறையிலேயே கழித்த அவர் 1666 ஜனவரி 22ம் திகதி மரணமடைந்தார்.

**நன்றி : உலக வரலாறு – ஐ. சண்முகநாதன்**

# விவிலியத் திருப்பாடல்களில்ப் பரந்து கிடக்கும் ஒழுக்க விழுமியங்கள்


பாவம், வஞ்சம், தீச்செயல் ஆகியவற்றைத் தம்மோடு ஒட்டி வைத்திருக்கும் மனிதர்கள் என்றோ ஒருநாள் அழுதுதான் ஆகவேண்டும். அப்படி அழுகின்ற நிலைக்கு அவர்கள் தள்ளப்படும் போது, அவர்களது உடலெலும்புகள் உறுதியிழந்தும், அழிந்தும் போக நேரும். காரணம், ஆண்டவரின் அருள் அவர்களுக்கு இல்லாமல் போவதும், ஆண்டவர் அவர்களுக்கு எதிராகச் செயற்படுவதுந்தான். இந்த நிலையில் அவர்களது உறுதி, பலம் யாவும் நிச்சயம் வறண்டு விடும் - கோடையின் வறட்சி போல் ஆகிவிடும்.

எனவே பாவம், வஞ்சம், தீச்செயல் என்ற குற்றச்செயல்களைச் செய்தவர்கள், செய்பவர்கள் அவைகளை ஆண்டவரிடம் ஒப்புக்கொடுத்தலே சிறந்தது, உகந்தது, நல்லது. ஒப்புக்கொடுப்பின் நல்லபேறுகள் அவர்களிடம் குடியிருக்கும். எந்த நெறிகேடான செயல்களும் அவர்களை அணுகா. மாறாக ஆண்டவரின் பேரன்புதான் அவர்களைச் சூழ்ந்து நிற்கும். அவர்களே நேரியர்கள் - நீதிமான்கள்.


அந்த நேரியர்களும், நீதிமான்களும் ஆண்டவரைப் பாடுவர் - போற்றுவர். அதுவே சிறப்பு என்பதை உணருவர் - மகிழுவர் என்று இயேசு கிறிஸ்து பூமியில் பிறப்பதற்கு ஆயிரம் ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்த தாவீது அரசன் வலியுறுத்தியவைகள் விவிலிய நூலிலுள்ள அவரது திருப்பாடல்களில் பரந்து கிடப்பதைப் பார்க்கலாம். அக்கருத்துக்கள் உங்கள் சிந்தனைக்காகக் கவிதை வடிவில் வருகின்றன - வாசியுங்கள்.

**திருப்பாடல் 32**

1. எவரது குற்றமெல்லாம் மன்னிக்கப் பட்டனவோ
எவரது பாவமெல்லாம் நெஞ்சுக்குள் இல்லாவாறு
அகன்றுமே போயினவோ அவர்தானிவ் வுலகினிலே
சிறந்துமே வாழ்வர்நல்ல பேறுகள் பெற்றவராய்.




2. எவரிலே குற்றங்குறை இலையென்று ஆண்டவர்தம்
உளத்திலே எண்ணிவிட்டால் - எவரது மனதினிலே
வஞ்சனை இல்லையென்று தீர்மானம் அவரெடுத்தால்
இத்தரை அம்மனிதர் நற்பேறு பெற்றவராம்.



3. என்னுடை பாவங்களை அறிக்கைநான் இடாததால்
என்நிலை அறிந்துமுழு நாளும்நான் அழுதழுது
கண்ணீராய்க் கொட்டிநின்றேன். அதனாலென் எலும்புகளும்
பெருங்கேடாய்த் தேய்ந்துகெட்டுக் கழன்றுமே போய்விட்டன.

4. பழுதெல்லாம் பிறர்க்குச்செய்து வீறாப்பாய் நின்றேன் அதால்
பொழுதெல்லாம் எனக்கெதிராய் ஆண்டவர் எழுந்தார் அந்தோ

கோடையின் வறட்சிபோல எந்தனின் வலிமையாவும்
வாழ்க்கையில்ச் சூனியமாய் வறண்டுமே போய்விட்டன.




5. இந்நிலை அறிந்துதானே ஆண்டவா உம்மிடத்தில்
என்குறை குற்றம்என்ற செயல்களை ஒப்புக்கொண்டேன்
மறைக்காமல்த் தானேஎந்தன் குற்றத்தை உம்மிடத்தில்
நிறைவாகச் சொல்லிச்சொல்லி ஒப்புதல் செய்துநின்றேன்.
அதன்பின்பு தானேநீரும் எந்தனின் நெறிகேட்டையும்
உளம்வெட்கு பாவத்தையும் எனைவிட்டு ஓடச்செய்தீர்.

7. இன்னலி லிருந்துஎன்னைக் காத்திட ஆண்டவாநீர்
விண்ணதி லிருந்து சித்தம் கொண்டிட்டீர் மகிழ்ச்சியுற்றேன்.

8. விண்நோக்கி உம்மைநானும் கேட்டதற் கிணங்க என்னைக்
கண்நோக்கி அறிவுரைகள் பின்வருமாறுசொன்னீர்
நீசெல்ல வேண்டியுள்ள நல்வழி காட்டிடுவேன்
நீஏற்க வேண்டியுள்ள அறிவினை ஊட்டிடுவேன்
என்னுடை கண்காணிப்பில் உன்னைநான் வைத்திருந்து
உன்வினை அகற்றிநீயும் வாழ்ந்திடச் சொல்லுகிறேன்.

9. கடிவாளம் பூட்டிஅந்த வாரினால் இழுத்தால்த்தானே
பிடிவாதம் கொண்டு உள்ள – பகுத்தறி வேதுமற்ற
பொல்லாத குதிரைகளும் கோவேறு கழுதைகளும்
நன்றாக உனைத்தொடரும் இல்லையேல்த் தொடர்ந்திடுமோ?
இத்தரை அறிவில்லாத அவைபோல்நீ ஆகிடாதே
சிந்தனை செய்திடுவாய் சீராக வாழ்ந்திடலாம்
என்றெல்லாம் ஆண்டவனார் அறிவுரை ஊட்டிவைத்தார்
நெஞ்செல்லாம் மகிழும் வண்ணம் நம்பிக்கை அவரில் வைப்போம்.



10. எண்ணிக்கை அற்றஇன்பம் அப்போது எம்மை ஆளும்
நம்பிக்கை அற்றபொல்லார் வாழ்வினைத் துன்பஞ்சூழும்

11. நீதியின் வடிவாம்நீதி மான்களே நேரியரே
ஆதியின் ஆண்டவரைப் பாடுங்கள் அகம்மகிழ்ந்து



கவிதை வரிகள்
முதுகலைஞர் – கலாபூஷணம்
நவாலியூர் நா. செல்லத்துரை.
(நவாலியூரான்)

# வார்த்தை ஜாலப் போட்டி – இல 02இன் விடைகள்

| | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| க | பி | அ | வ | து | ல | இ | மா | பு | பொ | யா | னி | பே | ல் | அ |
| ஞ | நி | ங் | சி | ண் | க் | ந் | ய் | டு | டி | ய | லி | ல் | நெ | க் |
| ல் | ரி | கோ | ச் | லி | ப் | தோ | பா | கா | சி | டு | ல் | ரே | ஸ் | இ |
| கா | லி | லா | ம் | தா | டி | னே | ப் | க் | உ | டு | வி | ல் | பூ | ட |
| ங் | க் | சு | ன | த் | கி | சி | னி | ரி | வி | னா | மூ | ப | சூ | நூ |
| ர | உ | ச | ன் | இ | பி | யா | மா | மெ | சி | ரீ | ப | ந | வா | லி |
| வ | சி | டி | லி | டி | ட் | வெ | ள | அ | ம் | ன் | வி | ட | வி | ய் |
| ஆ | ர் | மீ | னி | யா | ஓ | ஆ | க் | ச் | ட் | ஜ | ட | லை | ழா | ஏ |
| இ | ட் | இ | ணு | வி | ல் | ல | ல | அ | ய | ர் | லா | ந் | து | ப |
| பி | ஆ | ஃ | கா | னி | ஸ் | தா | ன் | ம | ம | ஆ | பா | வ | ர | னி |

## வார்த்தை ஜாலப் போட்டி – இல 02இன் முடிவுகள்

கிராமங்கள்

நாடுகள்

இப் போட்டிக்கு அனுப்பப்பட்ட 49 பேருடைய விடைகளில் முழுமையற்ற 6 விடைகள் நிராகரிக்கப்பட்டுள்ளன. சரியான 43 பேருடைய விடைகளில் குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்பட்ட 2 அதிர்ஷ்டசாலிகள் விபரம் வருமாறு

| 1ம் பரிசாக 200/= பெறும் அதிர்ஷ்டசாலி | 2ம் பரிசாக 150/= பெறும் அதிர்ஷ்டசாலி |
|---|---|
| 1. அலோசியஸ் கருணைசீலி உடுவில். | 1. K. திருவருட்பிரியா காரைநகர். |

S.M.S பதில் – 7

இவர் யார்?



**SMS பதில் 6**

இந்திய முன்னாள் ஜனாதிபதி டாக்டர் அப்துல் கலாம்



சரியாக விடையனுப்பிய 72 பேரில் பரிசுபெறும் அதிர்ஷ்டசாலிகள்

1. ரி. சிவராஜ், ஆனைக்கோட்டை
2. எம். ஆஷா, ஆனைக்கோட்டை
3. எஸ். ஜெரூசன், சண்டிலிப்பாய்.

நீங்கள் MAKUDAM SMS என Type செய்து பதிலையும் Type செய்து உங்கள் பெயர், முகவரியையும் குறிப்பிட்டு 0774651244 எனும் இலக்கத்திற்கு 05.07.2008இற்கு முன்னர் SMS செய்யுங்கள்.

Eg :- (MAKUDAM SMS - 7 (விடை) Your Name, Your Address)

சரியான விடையளித்தோரில் 3 அதிர்ஷ்டசாலிகள் தெரிவு செய்யப்பட்டு அவர்களுக்கு தலா 50/= Reload செய்யப்படும்.

# சந்திரன் பான்சி பலஸின்

**இல 04**

**போட்டி விதிமுறைகள்**

## குறுக்கெழுத்துப் போட்டி

சரியான விடைகளை கூப்பனிலுள்ள சதுரக் கட்டங்களில் முறைப்படி நிரப்பி 05.07.2008ற்கு முன் எமக்குக் கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைக்கவும். சரியான விடையை அனுப்பி வெற்றி பெறும் அதிர்ஷ்டசாலி ஒருவருக்கு பெறுமதிமிக்க பரிசில் வழங்கப்படும்.

### இடமிருந்து வலம்

1. பௌத்த தருமத்தை உலகிற்குப் போதித்தவர்.
4. பல பாகங்களாகப் பிரிக்கப்பட்டதன் சிறு பகுதி.
5. நிலத்தை உழுவதற்குப் பயன்படும் சாதனம்.
7. சோறு என்பது குழம்பி உள்ளது.
8. நீர் என்பதன் மறு சொல்.
10. கிறிஸ்தவ தேவாலயத்தில் வழிபாடுகள் நடத்துபவரை இப்படியும் அழைப்பர்.

### மேலிருந்து கீழ்

1. அநுராதபுர யுகத்திற்கு உரிய குட்டம்பொக்கன தடாகத்தின் படிக்கட்டுகளின் இரு பக்கங்களிலும் இதனைக் காணலாம்.
2. பத்து ஆண்டுகளைக் குறிக்கும்.
3. பூணை சீறும் என்பது போல பாம்பு
6. இந்தியாவில் உள்ள ரூபாவினுடைய சதத்தை இப்படி அழைப்பர்.
9. மழைக்காலத்தைக் குறிக்கும் சொல்.

---

## குறுக்கெழுத்துப் போட்டி - இல 03 இன் முடிவுகள்

இப்போட்டிக்கு 48 பேர் விடைகளை அனுப்பியிருந்தனர். இவர்களில் 24 பேருடைய விடைகள் முழுமையற்ற காரணத்தினால் நிராகரிக்கப்பட்டன. சரியான 24 பேருடைய விடைகளில் குலுக்கல் முறையில் தெரிவு செய்யப்பட்ட அதிர்ஷ்டசாலிகளின் விபரங்கள் ஒழுங்கு முறையில் இங்கு பிரசுரிக்கப்பட்டுள்ளன

**சந்திரன் பான்சி பலஸின்**

**ஆதரவில்**

பரிசில் பெறும் அதிர்ஷ்டசாலி

1. சகாயசீலன் ஜோய் நவாலி.1.
2. றஜித்தா சடாட்சரம் காரைநகர்.

பாராட்டு பெறும் அதிர்ஷ்டசாலிகள்

1. செளுபா ஜோன்பப்டிஸ்ட் - மானிப்பாய்.
2. ஜோய் சுதர்சினி - சண்டிலிப்பாய்.
3. செபமணி அல்பிரட் - நவாலி.
3. சி. துஷாந்தன் - நவாலி
4. சிவராஜாதாரமீகன் ஆனைக்கோட்டை.

**போட்டி 03 ன் விடைகள்**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 ப | 2 க | வ | ன் | | 3 கு |
| 4 மீ | சை | | | 5 லா | |
| ர் | | 6 அ | 7 ம் | மி | |
| | 8 பா | வ | ல | ர் | |
| 9 ஆ | த் | தி | சூ | டி | |
| ரை | | | 10 க | வி | ஞி |

ஓடர் கொடுத்து பெறப்படும் ஐஸ்கிறீம் வகைகள் இலவச வாகன வசதியுடன் குறிப்பிட்ட நேரத்தில் உங்கள் இடத்திற்கு கொண்டு வந்து தரப்படும்.

சுதாஸ் ஐஸ்கிறீம்

Jaffna Road, Manipay.

SUTHAAS ICE CREAM

சுதாஸ் ஸ்பெஷல், ஸ்பெஷல் ஐஸ்கிறீம், நட்ஸ் ஐஸ்கிறீம் போன்ற ஐஸ்கிறீம் வகைகள் மற்றும் குளிர்பான வகைகள், சிற்றுண்டி வகைகள் உரிய நேரத்தில் உயர்ந்த தரத்தில் நியாய விலையில் பெற்றுக்கொள்ளலாம்.

**மகுடம் சஞ்சிகையில் உங்கள் விளம்பரங்கள் இடம்பெற வேண்டுமா?**

**கட்டண விபரம்**

| | முழுப்பக்கம் | அரைப்பக்கம் |
|---|---|---|
| பின் அட்டை (கலர்) | - 6000/= | 5000/= |
| பின் அட்டை | - 2000/= | 1000/= |
| உள் பக்கம் | - 1000/= | 500/= |
| பிறந்தநாள், திருமணவாழ்த்துக்கள் | - 200/= | |

ASTAN அஸ்ரன் கல்வி நிலையம்

நவாலி வீதி, ஆனைக்கோட்டை. T.P - 021-2224031

* G.A.Q, 1st in Commerce

வகுப்புக்கள் வெகு தூரத்தில் இல்லை....

தரம் 01 முதல் O/L, A/L வரையான வகுப்புக்கள்

கற்கத்துடிக்கும் மாணவ சமுதாயத்தின் வழிகாட்டி.

அச்சுப்பதிப்பு : ரூபன் பிறிண்டேர்ஸ்.

முருகமூர்த்தி கோவில் வீதி. நவாலி கிழக்கு. T.P 0776 624386

# குறுக்கெழுத்துப் போட்டி – இல 04

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | | 2 | | | 3 |
| | | | | 4 | |
| 5 | | | 6 | | |
| | | 7 | சா | | |
| 8 ச | ல | | | | 9 |
| ம் | | | 10 | | |

**குறிப்பு :-**

மகுடம் சஞ்சிகையின் குறுக்கெழுத்துப் போட்டி பகுதியிலுள்ள வழிகாட்டல்களை கவனித்து மேற்படி கட்டங்களை தெளிவாக பூர்த்தி செய்து "மகுடம் சஞ்சிகை", நவாலி வை. எம். சி. ஏ, நவாலி, மானிப்பாய். என்னும் முகவரிக்கு 05.07.2008ற்கு முன்பாக அனுப்பி வையுங்கள்

முழுப்பெயர் :- ..................................................

தபால் முகவரி :- ..................................................

கையொப்பம் :- ..................................................

---

# வார்த்தை ஜாலப் போட்டி – இல 03

| | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| ஜோ | ன் | எ | ஃ | ப் | கெ | ன | டி | மி | சி | எ | கி | ப் | து | இ |
| து | டி | மி | க | னு | எ | உ | மா | ச் | தி | ம | அ | ல் | டி | க் |
| ன் | பி | ஆ | க | இ | டெ | ஈ | வோ | மீ | கா | டே | டூ | ரெ | வி | மு |
| லோ | மா | கோ | ர் | ப் | ப | ச் | சே | வ் | உ | ரூ | கை | றா | ளா | ரு |
| பி | பா | கொ | ர | றி | கோ | ப் | து | கி | மி | டோ | நு | மொ | டி | பீ |
| பா | ற | ஃ | னா | னா | சீ | நா | ங் | னி | ட | பி | லி | நூ | மி | டு |
| ம | ஔ | ரா | டா | ந | றீ | ஊ | நி | கீ | று | எ | தா | ஓ | ர் | ரீ |
| னீ | ம | கா | த் | மா | கா | ந் | தி | றூ | டீ | ரே | த் | றெ | பு | மோ |
| கௌ | ன | ஏ | னு | கு | பெ | டொ | மூ | ஐ | ரி | கூ | இ | ஒ | டி | பு |
| னு | கெ | பே | டி | மெ | இ | ந் | தி | யா | றே | கே | மே | பூ | ன் | லு |

**குறிப்பு :-**

அருகிலுள்ள எழுத்துக்களுக்குள் நீங்கள் மேலிருந்து கீழாகவோ, கீழிலிருந்து மேலாகவோ, இடமிருந்து வலமாகவோ, வலமிருந்து இடமாகவோ தேடிக் கண்டு பிடியுங்கள்.

இங்கு 5 உலகத் தலைவர்களின் பெயர்களும், 5 உலக அதிசயங்கள் அமைந்துள்ள நாடுகளின் பெயர்களும் மறைந்து காணப்படுகின்றன. தலைவர்களின் பெயர்களை சிவப்பு பென்சில் வர்ணத்தாலும், உலக அதிசய நாடுகளின் பெயர்களை பச்சை வர்ணத்தாலும் "மகுடம் சஞ்சிகை", நவாலி வை.எம். சி.ஏ, நவாலி, மானிப்பாய். என்னும் முகவரிக்கு 05.07.08ற்கு முன்பாக அனுப்பி வையுங்கள் குறித்து அனுப்புங்கள்.

முழுப்பெயர் :- ..................................................

தபால் முகவரி :- ..................................................

கையொப்பம் :- ..................................................